# ★ அரசுக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பாடசாலை அபிவிருத்திச் சபைகள் அமைக்கும் திட்டத்தை உடன் ரத்துச் செய்யுமாறு கோரி நேற்று கொழும்பில் அரசுக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்டம்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 5 இதழ் 6
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 16 02 1993

## பத்திரிகையாளர் மீது 'பிரேமா' யுத்த பிரகடனம்

(கொழும்பு)

ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாசா அரசசார்பற்ற பத்திரிகைகள் மீதும் பத்திரிகையாளர்கள் மீதும் ஒரு யுத்தத்தை பிரகடனப்படுத்தியுள்ளார்.

பதினொரு அரசியல் கட்சித் தலைவர்கள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்

அந்த அறிக்கையில் மேலும்

(4-ம் பக்கம் பார்க்க)

## அமெ. அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பத்திரிகையாளர் சுதந்திரங்களைப் பேணுமாறும் அவர்கள் மீதான அச்சுறுத்தல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்குமாறும் கோரி அமெரிக்க பத்திரிகையாளர் அமைப்பு ஒன்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு கடி

(4-ம் பக்கம் பார்க்க)

# ராவ் அரசு கொந்தளிப்பு நிலையில்

# தமிழக அரசு கலைக்கப்படுமா?

(சென்னை)

தமிழ் நாட்டில் உருவாகிவரும் அரசியல் நிலை குறித்து பிரதமர் பி. வி. நரசிம்மராவின் அரசில் ஒரு கொந்தளிப்பு நிலை உருவாகியுள்ளது. இந்திய அரசின் கொள்கைகளுக்கும். இந்திரா காங்கிரஸ் கட்சியின் நலன்களுக்கும் பாதகமாகவே தமிழ் நாட்டின் அரசியல் நிலை உருவெடுத்திருக்கிறது. தமிழக அரசு கலைக்கப்படுவதற்கு இது வழிவகுக்கலாம். இவ்வாறு அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் அ. தி. மு. கவுக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கைத் தீர்த்துவைக்க பிரதமர் நரசிம்மராவ் அனுப்பி வைத்த தூதுக்குழுவை முதல்வர் செல்வி ஜெயலலிதா அலட்சியப்படுத்தியதாக திரு. ராவ் தலைமையிலான அமைச்சரவை குழு குமுறிக்கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசின் சரியான மனப்போக்கையும், அதன் நாடித்துடிப்பையும் உடன் அறிந்துகொள்ளும் விதமாகவே தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## தளபதி கிட்டுவுக்கு தலைவரின் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மனத்தின் ஆழத்து உள்ளுணர்வுகளை வார்த்தைகளிற் சித்தரிப்பது கடினம். அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஓர் உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விபரிக்க முடியாது. எனது அன்புத் தம்பி கிட்டுவின் இழப்பும் அப்படித்தான். அவனது மறைவு எனது ஆன்மாவை பிழிந்த சோக நிகழ்வு. அதனை சொற்களால் வார்த்துவிடமுடியாது''

விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் புலிகள் மூத்த தளபதி கிட்டுவின் நினைவுதினத்தையொட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(3ம் பக்கம் பார்க்க)

## உறவு முறிந்துவிட்டதாக அரங்கநாயகம் தெரிவிப்பு

(சென்னை)

அ. தி. மு. கவிற்கும்-இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் இடையிலான கூட்டணி உறவு முடிந்துவிட்டதாக அ. தி. மு. க. தலைமை நிலையச்செயலரும் தமிழக அமைச்சருமான திரு. செ. அரங்கநாயகம் கூறியுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஹமில்டன் வவுனியா விஜயம்

(வவுனியா)

கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நேற்றுமுன்தினம்

(4-ம் பக்கம் பார்க்க)

## சேடப்பட்டி மீது பாலசுப்பிரமணியம் பாய்ச்சல்

(சென்னை)

எதிர்க்கட்சி தலைவரான தம்மை இழிவுபடுத்தும் வகையில் உள்நோக்கம் கற்பித்து முதல்வருக்கு சம்பந்தமில்லாமல் வக்காலத்து வாங்கியிருப்பதன் மூலம் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா முதல்வரின் விசு

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு

(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாகவும், சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து வருவது குறித்தும் ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலர் மொறிஸ் சிங் தமிழக அரசை எச்சரித்துள்ளார்.

சென்னையில் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் எச்சரிக்கைவிடுத்துள்ளார். (க-இ)

## அ.இ.மு.க. தொண்டர்கள் 500 பேர் கைது

(சென்னை)

சென்னையில் தபாலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் செய்ய முயன்ற அ. அ. இ. தி.மு. க. தொண்டர்கள் 500 பேர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

4-ம் பக்கம் பார்க்க)

## பாக்குநீரிணையில் இலங்கை இந்தியாவுடன் கூட்டு ரோந்து

(கொழும்பு)

பாக்கு நீரிணை கடற்பகுதியில் இந்திய-இலங்கை கடற்படைகள் கூட்டாக தொடர்ந்தும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனவாம்.

இதற்கென இலங்கை கடற்படை அதிவேக பீரங்கிப் படகுகளை தருவித்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை அரபுக் கடலிலிருந்து அந்தமான் நிக்கோபார் தீவுப்பிரதேசங்கள் உள்ளிட்ட பகுதிகளில் இந்தியகடற்படை தீவிர ரோந்துநடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் இன்ரபோலின் உதவியும் இதற்குப் பயன்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

## குமாரியில் நாளை உணவுப் பொருள்கள் தபால் பொதிகள் வருகின்றன

(யாழ்ப்பாணம்)

குமாரி கப்பல் நாளை புதன் கிழமை 8. 30 மணியளவில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது

இக்கப்பலில் உணவுப் பொருட்களுடன் மண்ணெண்ணய், சவர்க்காரம், தபால் பொதிகள் உரம் என்பனவும் எடுத்து வரப்படுகின்றன.

இந்தக் கப்பலில் அரிசி 1400 மெ. தொன். மா 1100 மெ. தொன், சீனி 400 மெ.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. உலக உணவுத் திட்டம் 60,000 அகதிகளுக்கு உதவி

(கொழும்பு)

நாடெங்கிலும் உள்ள 174 நலன்புரி முகாம்களில் இடம்பெயர்ந்து வாழும் 60 000 அகதிகளுக்கு உணவு அளிப்பதற்கெனச் சமூக சேவைகள் அமைச்சுக்கு அவசர உதவிகளை ஐ. நா. உலக உணவுத்திட்டம் தொடர்ந்தும் வழங்க உள்ளது.

அரிசி, தானிய வகை, சீனி போன்றவற்றை வழங்க உலக உணவுத் திட்டம் கடந்த ஆகஸ்ட் மாதம் இணக்கம் தெரிவித்திருந்தது. இத்திட்டம் நேற்றுடன் முடிவடைந்தது.

எனினும் தொடர்ந்தும் இந்த உதவியை வழங்க இந்த அமைப்பு இணங்கியுள்ளது. தற்போது மேற்படி 174 முகாம்களையும், 45 பிராந்திய செயலகங்கள் கவனித்து வருகின்றன. (க-இ)

## வடப... துரிதகெ...யில் உணவுப்பொருள்கள்

(கொழும்பு)

வடபகுதிக்கு உணவுப் பொருள்களை அனுப்பும் வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமாரி 5,000 மெற்றிக் தொன் நிவாரணப் பொருட்களை வடக்குக்கு அனுப்பி வைக்கும் வேலைகள் தற்போது

(4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### விற்பனைக்கு

டொயாட்ரா கோஸ்ரர் மினிபஸ் பின்கண்ணாடி, பன்னல் கண்ணாடிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ். குணரத்தினம் "கோகுல வாசம்" அல்வாய் கிழக்கு, அல்வாய். அல்லது மினிவான் இல: 29-6348, பருத்தித்துறை - யாழ். 750 (எ-2883)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும், வீடுகளிலும் கற்பிக்கப்படும். தொடர்பு: சனி, ஞாயிறு காலை 8-00 — 10-00மணி 204, மானிப்பாய்றோட், ஒட்டுமடம். யாழ்ப்பாணம். (எ-7235)

### தேவை

வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்கு பெண், உதவியாளர் ஒருவர் தேவை. வயது 30 — 40 வரை. விண்ணப்ப முடிவு 05 - 03 - 1993. தொடர்பு: மெடிக்கல் வைத்தியசாலை, ஸ்ரேசன் றோட். (புகையிரத நிலைய அருகாமை, வைரவ கோவிலடி முன்பாக) சுன்னாகம் (சி-7234)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை சாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-7197)


## இராசி பலன்

**16-02-1993**

**செவ்வாய்க்கிழமை**

**(தமிழுக்கு மாசி 5)**

தசமி பி. ப. 1-14 வரை: மூலம் முழுவதும் அமிர்த யோகம் இராகுகாலம் மாலை 3-33 முதல் 5-03 வரை சுப நேரம் காலை 11-03 முதல் 12-33 வரை.

மேடம்; இனசன கவலை, தாழ்ந்தநிலை, மனவெறுப்பு.

கடகம்: பலவித இடர்பாடு பயணகஷ்டம், பணமுடை.

மிதுனம்: காரிய சிறப்பு, தொழில்லாபம், மனைமாற்றம் கடகம்; நண்பர் வருகை, போஜன சிறப்பு. அதிகாரம். சிங்கம்: வேதாந்தம், கருத்து முரண்பாடு, அலைச்சல்.

கன்னி: ஏமாற்றம், கைப்பொருள் இழப்பு கண்டிப்பு, துலாம்: குடும்ப மகிழ்ச்சி, பணவரவு, தொழில் விருத்தி விருச்சிகம்: நடைக்கஷ்டம், அவசரகோலம், குடும்பபிரிவு. தனுசு: வாக்குவன்மை, நினைத்ததை சாதித்தல், நிலைமாற்றம். மகரம்: தேகபலக்குறைவு, அதிகசெலவு, தொழில் பிணக்கு. கும்பம்: குடும்பத்தில் சுபகாரியம், செல்வந்தர் நட்பு மகிழ்ச்சி, மீனம், நற்கீர்த்தி அன்னியர் சகயம், புதிய முயற்சி.

ஜோஸ்யர்

## அன்பளிப்பு

(சாவகச்சேரி)

சிறுவர் பாதுகாப்பு நிதியம் சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கு இரண்டு குப்பையேற்றும் வண்டிகளை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. மனித வலுவால் உபயோகிக்கின்ற இரண்டு சக்கரங்களையுடைய இவ்விரு வண்டிகளும் தற்பொழுது நகர் சுத்திகரிப்புச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. -155

## புடவை திருட்டு

(யாழ்ப்பாணம்)

உடுவில் கிராமத்தில் கால் நடைகள், சைக்கிள்கள், வீட்டுக் களவுகள் அதிகரித்துள்ளன. கடந்த செவ்வாய் இரவு உடுவில் வடக்கில் மூன்று வீடுகளில் திருடர்கள் புகுந்து ஐயாயிரம்ரூபா பெறுமதியான புடவைகளை திருடிச்சென்றுள்ளனர். இத் திருட்டுகள் பற்றி காவல்துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது. (109)

## இன்று

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவிலும் பிரதேச ஆயுள்வேத பாதுகாப்புச்சபையினை உருவாக்குவதற்காக பதிவு செய்யப்பட்ட சகல ஆயுள்வேதசித்த யுவானி மற்றும் பாரம்பரிய வைத்தியர்களையும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு தனது பணிமனையில் சமுகமளிக்கும்படி வலி வடக்குப் பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா வேண்டுகிறார்.

0 0 0

(ஆனைப்பந்தி)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான பெப்ரவரி மாதக் கொடுப்பனவு இன்று 16ம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் அடைக்கல மாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படும். (101)

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் படையினர் சிறுவிளான் நோக்கி நேற்று முன்தினம் பகல் வேளையில் ஷெல் தாக்குதல்களையும் துப்பாக்கிச்சூட்டினையும் மேற்கொண்டிருந்தனர்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையினரால் நாளை புதன்கிழமை பி. ப. 2-30 மணிக்கு "ஈழத்து நாட்டார் கூத்து இலக்கியங்களும் காத்தவராயன் கூத்து இலக்கியமும்" என்ற பொருள் பற்றிய கருத்தரங்கு நடாத்தப் படவுள்ளது. பல்கலைக்கழக அரும்பொருளக அறையில் நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கிற்கு தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை தாங்குவார்.


அகில இலங்கை

# இளங்கலைஞர் மன்றத்தின் 13வது இசைவிழா

இடம்: மன்ற கலாமண்டபம்

சட்டநாதர் வீதி, நல்லூர்

**8-ம்நாள் 16-2-93 செவ்வாய்**

வண் மேற்கு வைத்தியசாலை ஆதரவில்

மாலை 4 00 — 5.00 மங்கள இசை

நாதஸ்வரம்: ரி. சத்தியநாதன், ரி. செல்வநாதன், எஸ். கலியமூர்த்தி, கே. ராமதாஸ்

தவில்: எஸ். பரந்தாமன், எஸ். கண்ணன், எம். நாகேந்திரன், பி. யோகநாதன்

5 00 — 5.10 மிருதங்க இசை
அண்ணாமலை இசைமன்ற மாணவர்கள்

5.10 — 5.30 பாட்டு
சுவர்ணலக்ஷ்மி, விஜிதா, ஸ்ரீதேவி, சிவானுஜா, சரோஜினி
வயலின் — சுபத்திரா கணேசன்
மிருதங்கம் — எஸ். கமலதாஸன்

5.30 — 6-00 பாட்டு என். குலசிங்கம்
வயலின்: எஸ். கோபிதாஸ்
மிருதங்கம்: சதா வேல்மாறன்

6.00 — 6.45 இரு வயலினிசை
ஆர். எஸ். கேசவமூர்த்தி எஸ். சுகன்யா
மிருதங்கம்: கே. கண்ணதாசன் கடம்: சதாவேல்மாறன்

6.45 — 7.00 மங்கள விளக்கேற்றல்
திரு. முத்துகணேஸ் (வர்த்தகர்)
திரு. வி. சக்திவேல் (ஐயப்பன் புடவை மாளிகை)
திரு. ராகுலசூரியன்ஸ் (வர்த்தகர்)

தலைவர்: திரு. பி. கனகசபாபதி
(முன்னாள் தலைவர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம்)

சிறப்பு விருந்தினர்: டாக்டர் ஆர். தெய்வேந்திரன்
(சுகாதார வைத்தியர், யாழ். மாநகரசபை)

7.00 — 8.00 இசைக்கச்சேரி
பாட்டு: கே. ராமநாதன்
வயலின்: எஸ். சர்வேஸ்வரசர்மா
மிருதங்கம்: எஸ்! மகேந்திரன்

8.00 — 9.00 கெஞ்சிற் கச்சேரி
நாதஸ்வரம்: எஸ். எஸ். சிதம்பரநாதன்
வயலின் — ஆர். எஸ். கேசவமூர்த்தி
கெஞ்சிரா — எஸ். நாகராஜன்
மிருதங்கம் — கே. கண்ணதாஸன்
கடம் — சதா வேல்மாறன்

9.00 — 10.00 நாடகம்
கலைமகள் நாடகசபாவின்
"இந்தமண் எங்களின் சொந்தமண் புகழ்"
★ ஜி. சாந்தன் ★ நடிகஜோதி செல்வம்
— ஆகியோர் வழங்கும் —
**"மயானகாண்டம்"**
சரித்திர நாடகம்

வாழ்த்துகிறோம்

**நியூ லிங்கம் ஸ்ரோர்ஸ்**

திருநெல்வேலி மார்க்கட்

(எ 2861)


## அரசாங்க அறிவித்தல்

**சுகாதார சேவைகள் பிராந்திய திணைக்களம்**

யாழ்ப்பாணம்.

1993ஆம் ஆண்டிற்கான

# வழங்குநர்களைப் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள நிறுவனங்கட்கு (வைத்தியசாலைகள் உட்பட) தேவையான பின்வரும் பொருட்களை வழங்கக்கூடியவர்களிடமிருந்து மறுபந்தியில் குறிப்பிடப்படுவோரிடமிருந்து பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. காகிதாதிகள்
2. பாவனைப் பொருட்கள் ஈர்க்கு விளக்குமாறு, தும்புத்தடி, சவர்க்கார வகைகள்
3. வைத்தியசாலைப் பாவனைக்கான துணி வகைகள்
4. மரத்தளபாடங்கள், மரத்தளபாட திருத்த வேலைகள்
5. உருக்குத் தளபாடங்கள், உருக்குத் தளபாட திருத்த வேலைகள்
6. பிளாஸ்டிக் பொருட்கள் (வாளி, குப்பைக்கூடை, குப்பை வாளி முதலியன)
7. இரும்பு, பித்தளை, கன இரும்புப் பொருட்கள், ஆணிப்பூட்டுக்கள், வாளி வகைகள், குப்பை வாளி, மண்வெட்டி, அலவாங்கு, கத்தி, கோடரி முதலியவை
8. மின்சார உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்
9. வைத்தியசாலை உபகரணங்கள், (சேலைன் ஸ்ராண்ட், கட்டில்கள், சிறு கட்டில்கள், சத்திர சிகிச்சை உபகரண நிலைகள்)
10. கட்டிடத் திருத்தத்திற்கு அவசியமான பொருட்கள்
11. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டயர், டியூப் உட்பட)

### பதிவு செய்யத் தகைமையானோர்

1. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
2. கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனங்கள்
3. பதிவு செய்யப்பட்ட வேறு கூட்டுறவுச் சங்கங்கள்
4. கிராமோதய சபைகள்
5. கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
6. சனசமூக நிலையங்கள்
7. வருமானவரி செலுத்தும் பிரசித்திபெற்ற நிறுவனங்கள்

### விண்ணப்பித்தல்

மேற்படி வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவத்தைக் கீழ்க்காணும் விலாசத்திலுள்ள எனது பணிமனையில் ரூ. 25/- பதிவுக் கட்டணமாகச் செலுத்திப் பெற்று 01-03-93 திங்கட்கிழமை காலை 11-00 மணிக்கு முன் எனக்குக் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத்தபாலிலோ, அல்லது நேரடியாகவோ அனுப்பப்படலாம்.

1993 ஆண்டிற்குத் தேவைபான பொருட்கள் கொள்வனவு செய்யப்படும்பொழுது கேள்விகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மட்டும் கோரப்படும்.

வைத்தியகலாநிதி பொ. இரத்தினசபாபதி,
பிராந்திய பணிப்பாளர்.

சுகாதார சேவைகள்
பிராந்திய பணிப்பாளர் பணிமனை,
59, விக்ரோரியா வீதி,
யாழ்ப்பாணம்,
09-02-1993.

(ஏ-2372)

# காரைதீவு அகதி முகாமில் 300 பேர் படையினரால் கைது

(மட்டக்களப்பு)

காரைதீவு அகதிமுகாமிலிருந்து கடந்த வாரம் 300 ஆண்கள் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டனர்.

அகதிமுகாமைச் சுற்றிவளைத்த படையினர் 15 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் அனைவரையும் கைது செய்தனர். இவர்கள் கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்ட சில நிமிடங்களில் இந்த அகதிமுகாம் தீப்பிடித்து எரிந்தது.

இதனால் அங்கிருந்த 18 கொட்டில்கள் எரிந்து நாசமாகியதுடன் 2 குழந்தைகள் கருகிப்பலியாகின. 3 குழந்தைகளை காணவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. -கி

# ★ வகுப்பறையில் விஸ்கி போத்தலுடன் மாணவிகள் பிடிபட்டனர்

(கொழும்பு)

மகளிர் பாடசாலை ஒன்றில் வகுப்பறையில் 'விஸ்கி' போத்தலை மறைத்து வைத்திருந்த நான்கு மாணவிகளை பாடசாலை அதிபர் பாடசாலையிலிருந்து நீக்கியுள்ளார்.

பொறளை கோதமி மகளிர் வித்தியாலயத்தில் ஆண்டு 11ல் படிக்கும் 17 வயது மாணவிகள் நால்வரே இவ்வாறு 'விஸ்கி' போத்தலுடன் பிடிபட்டவர்களாவர். இவர்கள் பிடிபடும்போது போத்தலிலிருந்த அரைவாசி விஸ்கியை காலிசெய்து விட்டார்களாம்.

சம்பந்தப்பட்ட மாணவிகளின் பெற்றோர்கள் உடனடியாக அழைக்கப்பட்டு மாணவிகள் பாடசாலையை விட்டு வெளியேற்றப்பட்டனர். -கி

# வாய்ப்புற்று நோயினால் ஒரு லட்சம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

தென்கிழக்காசியாவில் வாய்ப்புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களின் தொகை வருடமொன்றுக்கு ஒரு லட்சத்துக்கு அதிகம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முரசு கரைவதும் இந்த நோய் ஏற்படுவதற்கு ஒரு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதைத் தவிர்ப்பதற்கு புகையிலை, வெற்றிலை போதைப் பொருள்கள் பாவனைக்கு எதிராக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

முரசு கரைவதை சாதாரண சிகிச்சை மூலம் குணப்படுத்தாவிடில், எயிட்ஸ் நோயாகவும் மாறலாம் என்று கருத இடம் உள்ளதென்றும் கூறப்படுகிறது. (சு)

## ஏற்புநோய் தடுப்பூசி

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் செயற்பட்டு வரும் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் திருக்குடும்ப தியான இல்லத்தில் இயங்கிவரும் வெளிநோயாளர் பிரிவில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் வெள்ளிக்கிழமையிலும் முற்பகலில் ஏற்புநோய்த்தடுப்பு ஊசி மருந்து போடப்பட்டு வருகின்றது. -72

# ஐ. நோ. கூ. ச. மோசடி விசாரணை செய்ய பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் இடம்பெற்ற மோசடியை விசாரித்து விரைவில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு உதவி கூட்டுறவு ஆணையாளர் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச்சங்கத்தைக் கேட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இம்மோசடியில் சங்கப்பணியாளர் நான்குபேர் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்றும் இதில் ஒருவர் ஏற்கனவே தற்கொலை செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மீண்டும் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள பணியாளரும், மோசடியில் ஈடுபட்டு தற்பொழுது தற்காலிக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (சு)

# கல்வியில் மாற்றம் ஏற்படுத்த நிரந்தர ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)

மாறிவரும் தேவைகளுக்கு ஏற்றவிதத்தில் நாட்டின் கல்வித்துறையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும். இதற்கென நிரந்தர தேசிய கல்வி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இவ்வாறு கூறினார். கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்கா மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

புதிய கல்வித் திட்டத்தில் ஆசிரியர்களுக்கு உரிய இடம் வழங்கப்படும். கல்வித்துறையில் பெற்றோருக்கும் ஒரு முக்கிய இடம் வழங்கப்படும். அனைத்து மாணவர்களுக்கும் உயர்கல்வி பெறும் வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

நாடுமுழுவதும் 300 மகா வித்தியாலயங்கள் அமைக்கப்படும். மாறிவரும் தேவைகளுக்கு ஏற்றவிதத்தில் மகா வித்தியாலய அமைப்பிலும் மாற்றங்கள் செய்யப்படும். (இ-கி)

## கட்டடம் வீழ்ந்து 15 மாணவிகள் பலி

(லக்னோ)

உத்தர பிரதேசத்தில் பாடசாலை கட்டிடம் இடிந்து விழுந்ததில் 15 மாணவிகள் பலியானார்கள். பலர் காயமடைந்துள்ளனர். (ரி

# தேசிய ஆங்கில சான்றிதழ் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய ஆங்கிலச்சான்றிதழ் (என். சி. ஈ) பரீட்சைக்குத் தோற்றிய வடபகுதிப் பரீட்சார்த்திகளின் பரீட்சை முடிவுகள் யாழ்ப்பாணம் வந்துள்ளன.

இம்முடிவுகள், பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளருக்குக் கொடுத்த நெருக்குதல் காரணமாக ஜனவரி 26-ம் திகதி கொழும்பில் தபாலில் சேர்க்கப்பட்டன.

தற்போது இப்பரீட்சை முடிவுகள் யாழ்ப்பாணப்பரீட்சார்த்திகளுக்கும் கிடைத்துள்ளது. -159-கி

## தளபதி கிட்டுவுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்; நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக தளபதியாக, எனது சுமைகளை தாங்கும் இலட்சிய தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது.

ஒரே இலட்சியப் பற்றுணர்வில் ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்து கொண்ட அனுபவத்தில் ஒருவரை ஒருவர் ஆழமாக இனம் கண்ட புரிந்துணர்வில் வேரூன்றி வளர்ந்த நேயம் அது.

அவனுள் ஒரு அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டுகொண்டேன். அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்து சிறப்பியல்புகளும் அவனிடமிருந்தன. அதனால் அவன் ஒரு அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான். போராடினான். அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும் பொது மக்களின் தோழனாகவும், எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது.

கிட்டு ஒரு மனித சரித்திரம், நீண்ட ஓய்வில்லாத, புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றின் ஒரு காலத்தின் பதிவு.

வங்கக்கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலைகளால் எமது தேசமே விழித்துக்கொண்டது.

கிட்டு நீ சாகவில்லை. ஒரு புதிய மூச்சாக பிறந்திருக்கிறாய். இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (க)

# "எந்தப் பத்திரிகையும் தடைசெய்யப்படமாட்டாது"

(கொழும்பு)

"அரசாங்கத்துக்கு எதிராக பிரசாரம் செய்யும் பத்திரிகைகளை அரசாங்கம் தடைசெய்யப்பார்க்கின்றது என்ற எதிர்கட்சியின் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றது."

இவ்வாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்று கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்களுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்துவரும் ஐலன்ட், டைம்ஸ் மற்றும் சிங்களப் பத்திரிகைகளை தடை செய்யும் நோக்கம் அரசுக்கு கிடையாது என்றும் ஜனாதிபதி மேலும் கூறினார். (வி)

# தொலைக்கல்வி ஆசிரியர் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்களத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சைக்குத்தோற்றுமாறு தொலைக்கல்வி போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தோரை யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கீழ்க்காணும் நிலையங்களுக்கு விண்ணப்பித்தோர் அந்நிலையங்களுக்கெதிரே குறிக்கப்பட்ட நேரங்களில் சமூகமளிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது.

இன்று காலை 8-00 சாவகச்சேரி, 9-30 கரவெட்டி 10-00 பருத்தித்துறை 11-00 வட்டுக்கோட்டை, பிற்பகல் 1-00 கோப்பாய் 2-00 தெல்லிப்பளை, 3-00 மருதனார்மடம், 4-00 வேலணை; நாளை பிற்பகல் 2-30 மணி யாழ்ப்பாணம் 3-30 நல்லூர் 4-00 மணிக்கு அனைத்து நிலையங்களுக்குமான ஆங்கிலம். (கே)

# பன்னல் கம்பி அறுத்து இரவு நேரத்தில் திருட்டு

(அரியாலை)

யாழ். மவுண்ட் கார்மல் வீதியிலுள்ள திருமதி மரியலேயா செல்வநாயகம் என்பவரது வீட்டில் கடந்த 8ந் திகதி இரவு உட்புகுந்த திருடர் வீட்டின் யன்னல்களிலுள்ள கம்பிகளை அறுத்தும் வளைத்தும் உள்சென்று 20 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம் 50 பவுண் தங்க நகைகள் உடுப்பு பெட்டிகள் இன்னும் பெறுமதியான பொருட்கள் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளனர். இதுபற்றி காவல்துறையில் புகார் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (59)

# 2வது கிரிக்கெட் டெஸ்ட் இந்திய அணி வெற்றி

(சென்னை)

இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையில் சென்னையில் நடைபெற்ற 2வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா இனிங்ஸாலும் 22 ஓட்டங்களாலும் வெற்றிபெற்று டெஸ்ட் தொடரையும் 2—0 என்ற நிலையில் வென்றுள்ளது.

இந்திய அணி முதல் இனிங்ஸில் 560 ஓட்டங்களை பெற்றது. இங்கிலாந்து முதல் இனிங்ஸில் 286 ஓட்டங்களை பெற்றது. மீண்டும் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 2வது இனிங்ஸில் 252 ஓட்டங்களை மட்டுமே பெற்றது இதில் கிறிஸ்லூயிஸ் -117, ரொபின் சிமித் -56 ஓட்டங்களை பெற்றனர்.

இப்போட்டியில் அனில் கும்ளே முதல் இனிங்ஸில் 4 விக்கெட்டுகளையும் 2வது இனிங்ஸில் 6 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார். ஆட்டத்தின் சிறந்த வீரராக சச்சின் டெண்டுல்கார் தெரிவானார்.

இந்த டெஸ்ட் போட்டியில் அனைத்து அம்சங்களும் இருந்தன சதங்கள் பெறப்பட்டன. அரைச்சதங்கள் பெறப்பட்டன. கிறிஸ்லூயிஸின் முதல் இனிங்ஸ் பூச்சியமும் 2வது இனிங்ஸ் புயல்வேக சதமும் (அவரது முதல் சதம்) பிளாக்கிபிடித்த முதல் காச் சித்துவின் 3வது சதமும் 1000 ஓட்டமும் டெண்டுல்கரின் 5வது சதமும் அதிகூடிய 165 ஓட்டமும் கபிலின் 5000 ஓட்ட நிறைவு. இந்தியாவின் 560. இத்தொடரின் 2வது முறையான இனிங்ஸ் தோல்வி கவாஸ்காரின் 4000 ஓட்ட நிறைவு என பலவும் இடம் பெற்றன. -சி

## வாழப்பாடி டில்லி விரைவு

(சென்னை)

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தியும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு எஸ் ஆர். பாலசுப்பிரமணியமும் அவசரமாக புதுடில்லிக்கு அழைக்கப்பட்டனர்.

அ. தி. மு. க.வுக்கும், இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் இடையிலேற்பட்டுள்ள முரண்பாடுகள் குறித்து நேரடியாக அறிந்து கொள்ளும் முகமாகவே பிரதமர் பி. வி. நரசிம்மராவ் இவர்கள் இருவரையும் அவசரமாக புதுடில்லிக்கு அழைத்ததாக தெரிவிக்கப்பட்டது. (இ-கி)

## பிரான்ஸில் தமிழ் கற்பிக்க முடிவு

(பாரீஸ்)

பிரான்ஸிலுள்ள அரச பாடசாலைகளில் தமிழையும்போதிப்பதற்கு பிரெஞ்சு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

இங்கு வாழும் தமிழர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தை அண்மித்திருப்பதே இதற்குக் காரணம். பிரெஞ்சுப்பாடசாலைகளில் விரைவில் தமிழ்ப் பாடநெறி ஆரம்பிக்கப்படும் என பிரெஞ்சுக் கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார். -159

# ஈராக் மீதான பொருளாதார தடை நீக்கப்படும்?

(வாஷிங்டன்)

ஈராக் மீது ஐ. நா. சபை விதித்துள்ள பொருளாதாரத் தடைகள் நீக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் தற்போது தென்படுவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதனால் ஈராக்கில் பொருட்களின் விலைகள் பெருமளவில் வீழ்ச்சி அடைந்ததுடன், ஈராக்கின் டினார் நாணயம் உலகச் சந்தையில் வலுவடைந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

அமெரிக்க அதிபர் பில் கிளின்டனுடன் ஈராக் நண்பராகவே இருக்க விரும்புவதாக, ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் அனுப்பிய சமாதானச் செய்தியைக் கிளின்டன் நிர்வாகம் வரவேற்றுள்ளதாலேயே இந் தடை நீக்கம் இடம் பெறலாமென்றும் கூறப்படுகிறது. (வி)

## லக்ஸ்பிறே 55 ரூபா

(மானிப்பாய்)

யாழ் கச்சேரியடியிலுள்ள கரித்தகத் திணைக்களத்தில் நேற்று 15ந் திகதி முதல் அ. உ. அட்டையுள்ளவர்களுக்கு சகாய விலையில் 400 கிராம் லக்ஸ்பிறே பக்கற் 55 ரூபாவாகவும் 1 கிலோ சர்க்கரை 50 ரூபாவாகவும், மைசூர் பருப்பு 65 ரூபாவாகவும், 1 சன்லைற் 8 ரூபாவாகவும் பாவனையாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. (71-இ)

## 'லக்திவ' பத்திரிகை கொழும்பு மாநகரசபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

'லக்திவ' பத்திரிகையை வெளியிடும் பிரபாத் பத்திரிகை நிறுவனம் கொழும்பு மாநகர சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானித்துள்ளது.

சம்பந்தப்பட்ட நிறுவனம் கடந்த வருடம் டிசம்பர் மாதத்துக்கும் இந்த வருட ஜனவரி மாதத்துக்குமான வாடகைப் பணத்தைச் செலுத்த சென்றபோது அவற்றை கொழும்பு மாநகர சபை ஏற்க மறுத்ததைத் அடுத்தே மாநகர சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கையில் இறங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

## ராவுடன் வாழப்பாடி பேச்சு

(புதுடில்லி)

தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சித்தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி, தமிழக சட்டப் பேரவை எதிர்க்கட்சித்தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் பிரதமர் திரு பி. வி. நரசிம்மராவை புதுடில்லியில் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினர்கள்.

அ. தி. மு. க.- இந்திரா காங்கிரஸ் கட்சிக்கிடையிலான நட்புறவு விவகாரம் தொடர்பாக நடைபெற்ற பேச்சுவார்த்தை சுமார் 45 நிமிட நேரம் நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோதிலால் ஒரா, மற்றும் அமைச்சர் கே. பி. தங்கபாலு ஆகியோர் பிரதமரிடம் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

ஆனால் பேச்சுவார்த்தையின் விபரங்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை. (க)

## சீன தீ விபத்தில் 78 பேர் பலி

(பீக்கிங்)

சீனாவில் மிகப்பெரிய வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்று ஏற்பட்ட தீவிபத்தில் 78 பேர் கருகி மாண்டுள்ளதுடன் 53 பேர் பாரிய எரிகாயங்களுடன் ஆபத்து நிலையிலும் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மின் ஒழுக்குக் காரணமாக இந்த மூன்று மாடிக்கட்டிடத்தில் தீப்பிடித்துக் கொண்டதினால் கட்டிடத்தின் பல பகுதிகள் இடிந்து விழுந்துவிட்டதாகவும் தீயணைக்கும் படையினர் பலமணி நேரம் தீயுடன் போராடி அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (வி-இ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக ஊழியர்கள் பங்கேற்கும் குழந்தை சண்முகலிங்கத்தின் தயாரிப்பில் உருவான 'உறவுகள்' எனும் நாடகமும் பல்கலைக் கழக மாணவர்கள் பங்கேற்கும் லோகச்சந்திரனின் தயாரிப்பில் உருவான "இவர்களும் நேசித்தவர்கள்" எனும் நாடகம் பிற்பகல் 4 - 00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம் பெறும். (சி-மி)

## பத்திரிகையாளர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பத்திரிகையாளர்களுக்கு நெருக்குதல்கள் கொடுக்கப்படுவதை சர்வதேச அவதானிகளும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

கறுப்புப் பூனைகள் பத்திரிகையாளர்கள் மீது மேற்கொண்ட நடவடிக்கை குறித்து இது வரை விசாரணை மேற்கொள்ளப்படவில்லை.

பத்திரிகையாளர் றிச்சாட் டி சொய்சா மரணம் தொடர்பாகவும் விசாரிக்கப்படவில்லை. (இ)

## இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வட்ட லியோ கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டத்தில் சென். றேக்ஸ் கழகத்தை எதிர்த்து சென். நீக்கிலஸ் கழகம் மோதுகின்றது.

இப்போட்டி அரியாலை மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (வி)

## அமெரிக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

நியூயோர்க்கிலுள்ள பத்திரிகையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு எழுதியுள்ள இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் பத்திரிகையாளர்கள் சுதந்திரம் நசுக்கப்படுகிறது அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்கள் பாதுகாக்கப்படவேண்டும் அவர்கள் உரிமைகள் பேணப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## உறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரு கட்சிகளுக்குமிடையிலான கூட்டணி முறிந்துவிட்டதாக கடந்த வாரம் ஆறு அமைச்சர்கள் விடுத்த அறிவிப்பை மறுத்து முதல்வர் ஜெயலலிதா எதுவும் கூறவில்லை என்றார்.

ஆறு அமைச்சர்களும் கூறியதை முதல்வர் அங்கீகரிக்கிறார் என்பதை இது தெளிவாகக் காட்டுகிறதெனவும் திரு. அரங்கநாயகம் கூறினார்.

பாரதீய ஜனதா கட்சியும், அ. தி. மு. க.வும் கூட்டணி ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பு இருப்பதாக பி. ஜே. பி. தலைவர் திரு. கோவிந்தாச்சாரியா கூறியது பற்றி திரு. அரங்கநாயகம் கூறுகையில்: அந்தக் கட்சிக்கு தமிழகத்தில் பலம் இல்லையென்றும் அதனுடன் அ. தி. மு. க. கூட்டணி அமைக்காதெனவும் கூறினார். (சி-இ)

## தென்பகுதி கடற்றொழிலாளர் அரசுக்கு எதிராகப் போர்க்கொடி

(கொழும்பு)

தென்பகுதி கடற்பிரதேசத்தில் கொரிய நாட்டைச் சேர்ந்த நவீன ஆழ்கடல் மீன் பிடிபடகுகள் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்படும் பட்சத்தில் உள்ளூர் கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் என அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தவிடயத்தில் அரசும் பாதுகாப்புப் படையினரும் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால் அரசுக்கு எதிராகத் தாம் போர்க்கொடி உயர்த்தப்போவதாக காலி மாவட்ட கடற்றொழிலாளர்கள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

காலி மாவட்டத்தைச் சேர்ந்த 57 கடற்றொழிலாளர் சங்கங்கள் இந்த நிலைமை குறித்து நேற்று ஆராய்ந்தன.

காலி மாவட்டத்தில் 15ஆயிரம் கடற்றொழிலாளர் குடும்பங்கள் வெளிநாட்டு மீன்பிடிப்படகுகள் வருகையினால் பாதிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## அ தி மு க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நியாய விலைக் கடைகளில் அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டதை ஆட்சேபித்தே மேற்படி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதே காரணத்திற்காகவும், இந்தி மொழித் திணிப்பை எதிர்த்தும் சேலம் மாவட்டம் சங்ககிரி ரயில்நிலையம் முன் ஆர்ப்பாட்டம் நடத்திய அ. அ. தி. மு. க. தொண்டர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (க)

## பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்புக்குத் திறமை அடிப்படையிற் பதவியேற்றஞ் செய்வதற்கான பரீட்சையும் (1991), இலங்கை திட்டமைப்புச் சேவையின் 11ம் வகுப்பில் உதவிப்பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான யாவர்க்குமுரிய போட்டிப் பரீட்சையும் (1992) எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27ம் திகதியன்று கொழும்பில் மட்டும் நடத்தப்படும். இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (159-இ)

## விசேட அடையாள அட்டைகள்

(மட்டக்களப்பு)

மட்டுநகரில் ரியூட்டறிகளில் கல்விபயிலும் மாணவ மாணவியருக்கு விசேட அடையாள அட்டையை பொலிஸார் வழங்கவுள்ளனர்.

இது தொடர்பான உயர் மட்டமாநாடொன்று நேற்று முன்தினம் மட்டுநகரில் நடைபெற்றது. (சி)

## அரசுக்கு எதிராக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று இடம் பெற்றது.

கொழும்பு கண் ஆஸ்பத்திரி சந்தியில் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

மாணவர்களும் மற்றும் அரசியல் அமைப்புக்களைச் சேர்ந்த 31 அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

உலக வங்கியின் ஆலோசனையின்பேரில் இலவசக் கல்வித் திட்டத்தை சீர்குலைக்கும் நோக்குடனேயே அரசு பாடசாலை அபிவிருத்திச் சபைகளை அமைத்துவருகிறது.

இலங்கை சம்பந்தமாக 1992--1995ம் ஆண்டு காலப் பகுதிக்கென உலகவங்கி தயாரித்துள்ள அறிக்கையில் கல்விக்கு கட்டணம் அறவிடப்படவேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

அதனை செயற்படுத்தும் விதமாகவே பாடசாலை அபிவிருத்திச்சபைகளை இயங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர். (இ)

## ராவ் அரசு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழப்பாடி ராமமூர்த்தியையும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியத்தையும் திரு. நரசிம்மராவ் அவசரமாக புதுடில்லி அழைத்தார்.

மேலும் விடுதலைப் புலிகள் தொடர்பாக முதல்வர் ஜெயலலிதா அண்மையில் தமிழக சட்ட சபையில் வெளியிட்ட அறிக்கைகளும் மத்திய அரசின் கொந்தளிப்புக்கு மற்றொரு காரணமெனக் கூறப்படுகிறது.

அ தி மு க.வுடனான சமாதான முயற்சிகள் தோல்வியுறும் பட்சத்தில், மத்திய அரசின் கொந்தளிப்பு அதிகரிக்கும் எனவும், இதனால் தமிழக அரசு கலைக்கப்படும் நிலைக்கு உள்ளாகலாம் எனவும் அரசியல் அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

## வடபகுதிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 'எம். வி. மத்ஸ்கொலாக்' எனும் கப்பலில் 3,200 தொன் உணவுப் பொருள்கள் அனுப்பப்படுகின்றன.

'எம். வி. றினுக்' எனும் கப்பல் 1,700 மெற்றிக் தொன் நிவாரணப் பொருட்களை, யாழ். அரச அதிபருக்காக எடுத்துச் செல்லும். இவை தவிர 'எம். வி. மற்றனு புளோறி' எனும் கப்பலில் மன்னாருக்கு உணவுப் பொருள் மற்றும் நிவாரணப் பொருட்கள் அனுப்பப்படவுள்ளன.

இதேவேளை எம் வி ஞானரூமா' என்ற பயணிகள் கப்பல் திருமலைக்கும் காங்கேசன்துறைக்குமிடையில் பயணிகளை ஏற்றிச் செல்வதில் ஈடுபட்டுள்ளதாம். திருமலையிலிருந்து திங்கள் வியாழனில் இக்கப்பல் புறப்படுகிறதாம்.

மேலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பாதுகாப்பில் கிளிநொச்சிக்கு 25 லொறிகளில் அத்தியாவசிய பொருட்கள் அனுப்பப்பட்வுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## குமாரியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொன், மஞ்சள் பருப்பு 50 மெ. தொன், மைசூர் பருப்பு 20 மெ. தொன், சவர்க்காரம் 10 மெ தொன், அமோனியம் சல்பேற்று 100 மெ. தொன், ரி. டி. எம். உரம் 100 மெற்றிக் தொன், மண்ணெண்ணய் 135 பரல், காகிதாதிகள் 3 மெ. தொன். (159-இ)

## சேடப்பட்டி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாச மிக்க ஊழியர் என தம்மை காட்டிக்கொள்ள முயல்வதாக தமிழக எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குற்றம் சாட்டியுள்ளார்.

சட்டத்தின் ஆட்சிக்கும் ஜனநாயக நெறிமுறைகளுக்கும் மதிப்பளிக்காமல் பேரவைத் தலைவரும், முதல்வரும் நடந்து கொள்வதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

பிரதமர் நரசிம்மராவின் விசேட பிரதிநிதிகளை சந்தித்த பின் அவர் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார். (சி-இ)

## இன்று பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப் படிப்பு மாணவர்களின் 1990/91ம் ஆண்டு கல்வியாண்டிற்கான கலை முதற்தேர்வு, வணிகமுதற்தேர்வுப் பரீட்சை முடிவுகள் இன்று 16ம் திகதி வெளியாகவுள்ளன.

யாழ். பல்கலைக் கழகத்தில் முதல் தடவையாக வெளிவாரிப் பரீட்சை கடந்த ஆண்டு நடாத்தப்பட்டது தெரிந்ததே.

முன்னதாக ஜனவரி மாத நடுப்பகுதியில் இப்பரீட்சை முடிவுகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் ஒருசில காரணங்களால் பரீட்சை முடிவுகள் வெளியாவதில் தாமதம் ஏற்பட்டது. (159-சி)

## ஹமில்டன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாபகுதிக்கு திடீர் விஜயம் செய்தார்.

வவுனியாவில் 'ஒபரேஷன் கறுப்பு நரி' இடம்பெற்ற பகுதிகளுக்கு சென்று இவர் நிலைமைகளை நேரில் பார்வையிட்டார். (இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால், யாழ்ப்பாணம் இலங்கோவில் மேற்கு வீதி, 63 ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News paper at the General Post office, SriLanka under Licence Number B/10336/B